that evidence before the House of which the person complained of is a Member or officer.'

Mr. SPEAKER : I have already announced that the decision will be given on a later date.

3. கவன ஈர்ப்பு.

திருப்பூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் கதர் நெசவுக்கு வேண்டிய கஞ்சிக்குத் தேவைப்படும் அரிசி கிடைக்காமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. துரைசாமி அவர்கள் 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை உணவுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

***திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 41-வது விதியின்கீழ் கொண்டுவருகின்ற கவன ஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தமாக இரண்டொரு கருத்துக்கள் பேச அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் தீர்மானத்தைப் படியுங்கள்.

திரு. சு. துரைசாமி : "திருப்பூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் உள்ள இடுவாய், இடுவம்பாளையம், சின்னாண்டிபாளையம், சொக்கனூர் மற்றும் உள்ள ஊர்களில், கதர் நெசவுத் தொழிலுக்கு இன்றியமையாத அரிசிக் கஞ்சிக்குத் தேவையாகும் அரிசி கடந்த இரண்டு மாதங்களாகக் கிடைக்கப் பெறாமல் அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படும் நிலைமையால் பல குடும்பங்கள் இன்னலுற்றிருக்கின்றன என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பூர் சர்வோதய சங்கத்தின் ஆதரவில் அப் பகுதியில் 786 தறிகள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி சங்கத்துடன் இணைந்துள்ள நெசவாளர்களைத் தவிர, திருப்பூர் தாலூகாவில் சுமார் 2,500 தறிகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தறிகளுக்குத் தேவைப்படும் கஞ்சிக்காக திங்கள் ஒன்றிற்குச் சுமார் 68 டன் அரிசி நொய் தேவைப்படுகிறது. சென்னை மாநகருக்கு அடுத்தபடியாக கோயம்புத்தூர் மாவட்டத்திற்குப் புறத்தேயிருந்துதான் பெருமளவில் நெல் ஒதுக்கப் படுகிறது. எனவே, அந்த மாவட்டத்திற்குள்ளேயே கணிசமான அளவில் அரிசி நொய் கிடைக்கக்கூடும். தவிர, கஞ்சி காய்ச்சுவதற்கான அரிசி நொய் கிடைக்கவில்லை என்பது திருப்பூர் தாலூக்காவிற்கு மட்டுமே தனிப் பட உள்ள சிக்கல் அல்ல. ஆனால் நெசவுத் தொழில் நடைபெறும் சேலம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய பிற மாவட்டங்களிலும் இதே நிலைதான் உள்ளது. அம்மாவட்டங்களிலுள்ள நெசவாளர்கள் உள்ளூரில் கிடைக்கும் நொய்யைக் கொண்டே தங்கள் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். அதேபோல, திருப்பூர் பகுதியில் உள்ள நெசவாளர்களும் உள்ளூரில் கிடைக்கும் நொய் இருப்புக்களைக் கொண்டே தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அம்மாவட்டத்திற்கு நெல் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டு அம்மாவட்டத்திற்குள்ளேயே அரிசி அரைக்கப்படுவதால், அங்கு கிடைக்கும் அரிசி நொய் குறைவாக இருப்பதற்கில்லை. இருப்பினும், உள்ளூரில் அவர்களுக்குப் போதிய அளவில் அரிசி நொய் கிடைக்காமல் தொல்லைப்பட நேர்ந்தால் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்தோ, அரிசி நொய் கிடைக்கக்கூடிய வேறு மாவட்டத்திலிருந்தோ

குறிப்பிட்ட அளவில் அரிசி நொய்யை எடுத்துச் செல்வதற்கான அனுமதிச் சீட்டைப் பெறுவதற்கு அவர்கள் நெசவாளர் சங்கங்களின் மூலமாக உணவு வழங்கல் ஆணையருக்கு (Civil Supplies Commissioner) விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சு. துரைசாமி அவர்கள் ஒரு கேள்வி கேட்கலாம்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, நான் இதன் மீது கேள்வி கேட்க விரும்பவில்லை.

4. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த அலுவல் கோரிக்கைத் தீர்மானங்கள். மூன்று கோரிக்கைத் தீர்மானங்கள் இருக்கின்றன. இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறபடியால் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் ஒரு மணி நேரம் என்று வகுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அவைமுன்னவர் அவர்களுடைய கருத்துக்கு உட்பட்டு அவ்வாறு ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் VI என்பதற்கு ஒரு மணி நேரமும், கோரிக்கை எண் VII. VIII இரண்டுக்கும் சேர்த்து 2 மணி நேரமும் எடுத்துக் கொள்ளலாம்.

கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே நிதிக் கோரிக்கை எண் VI எடுத்துக் கொள்ளப்படுகிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கோரிக்கையைக் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,27,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. க. ர. நல்லசிவன் : தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, லெஜிஸ்லேடிவ் கவுன்சிலைக் கலைத்துவிடுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்ட—

"கோரிக்கை எண் VI—மாநிலச் சட்டப் போரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுப் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, மாநிலச் சட்ட மன்றத்தை (மேல்சபை) கலைக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட—

"கோரிக்கை எண் VX—மாநிலச் சட்டப் பேரவை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 19,27,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.